அளவுக்கு நிறைவேற்றப்படலாம் என்று பரிசிலிக்க அறநிலையப் பாதுகாப்புத் துறை மேற்கொண்டு, அதுபற்றிய நடவடிக்கைகள் எடுப்பதில் நிர்வாகிகள் இப்பொழுது ஈடுபட்டிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Sir, recently an Archakars' Mahanadu was held and it was addressed by the Hon. Minister for Industries and I also participated in that Mahanadu. In that Mahanadu a number of requests were made by the members of that Association. In view of the fact that there are some funds with the Religious Endowments Board and in view of the fact that these archakars have lost all the advantages that they had got in the olden days by way of traditional rights, will this Government re-examine their difficulties and accept liberally whatever demands that they make.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த மகாநாட்டில் அர்ச்சகர்கள் சிலபல கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். அவைகள் இப்பொழுது இந்த இலாக்காவின் பரிசிலனையில் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பரிசிலனை முடிந்த பின்னால், இதுபற்றி என்ன செய்யலாம் என்று யோசிக்கலாம்.

சங்க காலத்து நாணயங்கள்

* 73 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) சங்க காலத்து நாணயங்கள் வடார்க்காடு மாவட்டம், ஆண்டிப் பட்டியில் அண்மையில் கண்டெடுக்கப்பெற்றன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், எத்தனை நாணயங்கள் ?

(உ) அவை பண்டைய வரலாற்றினைத் தொகுப்பதில் எப்படி உதவுகின்றன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 143 ஈய நாணயங்கள்.

(உ) இந்த நாணயங்கள் வரலாற்று முறையிலும், எழுத்தியல் வகையிலும் சுவையுடையவையாகும். அந்த நாணயங்களின் மேல் பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. இந்த நாணயங்கள் சென்னைப் பொருட்காட்சிசாலைக்கெனப் பெறப்பட்டுள்ளன. இவை சங்க காலத்தைச் சேர்ந்தவையா இல்லையா என்பது இன்னும் உறுதியாகவில்லை. இந்த நாணயங்களின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சென்னைப் பொருட்காட்சிசாலையில் விரிவாக ஆராயப்பட்டு வருகிறது. இந்த நாணயங்களின்

சேகரிப்பு குறித்து சென்னைப் பொருட்காட்சிசாலையின் சிறு அறிக்கையாக தனி ஆராய்ச்சி நூல் ஒன்று வெளியிடக் கருதப் பட்டுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, பண்டைத் தமிழ் அகத்தின் வரலாற்றினை அறிய செப்பேடுகள், நாணயங்கள், உதவி யாக இருப்பதன் காரணமாக, அவற்றைப் பற்றி பொதுமக்கள் அறியும் வகையில், அரசு புத்தகங்கள் வெளியிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத்தலைவர் அவர்களே, இந்த நாணயங்களில் ஒரு புறத்தில் பிராமி எழுத்துக் களும், மறுபுறத்தில் கடல் அலை போன்றவைகளும், முக்கோண மலைகள் போன்ற வடிவங்களும் காணப்படுகின்றன; இவை முற் பகல் 9–30 ஆராயப்பட்டு வருகின்றன. அந்த எழுத்துப்படி, சின்னன், சேந்தன், என்ற பெயரும் காணப்படுகிறது. இந்த சேந்தன் சங்க காலத்தைச் சேர்ந்தவன்தானா அல்லது வேறு ஒருவனா என்பது பற்றி ஆராய்ச்சி செய்த பிறகு முழு விவரங்களும் தெரிந்த பிறகு, ஒரு சிறு நூலாக வெளியிட சர்க்கார் கருதி யுள்ளது.

Special exhibition of manuscripts.

*74 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government Museum at Madras has organised a special exhibition of some of the manuscripts of the great freedom fighters and Tamil Poet Subramania Bharathi ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) புகழ் பெற்ற தமிழ்க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியின் கையெழுத்துப் படிகளைக்கொண்ட சிறப்புப் பொருட்காட்சி ஒன்று 1967, செப்டம்பர் திங்களில் தமிழ்நாடு அரசாங்க அரும்பொருட் காட்சி சாலையால் நடத்தப்பட்டது. இந்தப் பொருட்காட்சியில் கவிபாரதி யாரின் கண்ணம்மா பாட்டுக்கள், குயில் பாட்டு, கீதை உரை, அகச்சித்திரம் என்னும் தலைப்பில் ஒரு நாடகம், பதஞ்சலி யோக சூத்திரம் சந்திரிகாவின் கதை பற்றிய உரைநடைப் பகுதி ஆகியவை இடம்பெற்றன. இந்த அரும் பொருட்காட்சியில் கவி பாரதியாரின் கையெழுத்துப் படிகள் மட்டுமே வைக்கப்பட்டிருந் தன. ஏனைய சுதந்திரப் போராட்ட வீரர்களின் கையெழுத்துப் படிகள் இடம் பெறவில்லை.

திரு. கே. விநயகம் : சார், வ. உ. சிதம்பரனார் எழுதிய சில நூல்கள் இருப்பதாகத் தெரிகிறதே, அவர் கையாலேயே எழுதிய கையெழுத்துப் பிரதி யாரிடம் இருக்கிறது என்று அறிந்து, அதை வாங்கி ம்யூசியத்தில் வைக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?